26.04.2024 MCOP No. 1/2021

சாட்சி : PW 1 கனகவள்ளி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

பள்ளத்தூர் காவல் நிலைய குற்ற எண்:91/2019 வழக்கில் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. என் கணவர் மெய்யப்பனின் பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.2. இந்த விபத்து தொடர்பாக காரைக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை ம.சா.ஆ.3. விபத்து வாகனமான TN 63 N 1815 அரசு பேருந்து மற்றும் TN 63 U 3681 ஸ்கூட்டி பெப் ஆகிய வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.4. என் கணவரின் இறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.5. என் கணவரின் வாரிசுச் சான்றிதழ் ம.சா.ஆ.6. மனுதாரர்களின் ஆதார் அட்டைகள் ம.சா.ஆ.7. எங்களது குடும்ப அட்டை ம.சா.ஆ.8. மனுதாரர்களின் வங்கி பாஸ் புத்தகங்கள் ம.சா.ஆ.9. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை: இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.